


தூத்துக்குடி மாவட்டம், தென்திருப்பேரை பேரூராட்சியில் புதிதாக கட்டப்பட இருக்கும் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகளுக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி.. அடிக்கல் நாட்டி விழாவில் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, ஆறுமுகநேரி பேரூராட்சி மடத்துவிளை மற்றும் ராஜமன்யபுரம் பகுதிகளில் திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடையை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ஆறுமுகநேரி பேரூராட்சி அலுவலகத்திற்கு எதிரே சுத்தம் செய்யப்பட்ட குப்பை கிடங்கை பார்வையிட்டு அப்பகுதியை பயனுள்ளதாக மாற்றுவது குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன். மீன்வளம். மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும். தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன். மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ். மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பிரம்மசக்தி. பேரூராட்சி செயலாளர் கல்யாண சுந்தரம். இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி வட்டம் வெளிதாங்கிபுரம் கிராமத்தில் நடந்த சிறப்பு மனு நீதி நாள் முகாமில் 158 பயனாளிகளுக்கு ரூ.2.66 கோடி மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார். இதில் ஆட்சித்தலைவர் ச.வளர்மதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் பெ.வடிவேலு, மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், ஊராட்சி குழு உறுப்பினர் சுந்தராம்பாள், பெருமாள், ஒன்றிய குழு துணை தலைவர் தீனதயாளன், வட்டாட்சியர் பாலசந்தர், ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ண மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஊழலும் மதவாதமும் கைகோர்த்து வரும்

# மோடி ஆட்சியை அகற்றும் ஒரே மகத்தான தலைவராக மு.க.ஸ்டாலின் திகழ்வார்!

## நெல்லை பொதுக்கூட்டத்தில் ஆ.ராசா எம்.பி. பேச்சு!

நெல்லை. ஜுலை.15-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஏற்பாட்டில் பாளையங்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் திடலில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. பிறபடுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஏற்பாட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் பாளையங்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் திடலில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல். எஸ்.லெட்சுமணன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் முருகன் மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாநகராட்சி மேயர் சரவணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி.கழக மூத்த முன்னோடிகளை கௌரவித்து பொன்னாடை அணிவித்து பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என செயற்குழு, பொதுக்குழு எடுத்த முடிவின்படி கட்சி ரீதியாகவும், அரசு ரீதியாகவும், சிறப்பாக கொண்டாட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முடிவெடுத்தார்கள்.

ஒரு தலைவருக்கு நூற்றாண்டு விழா வரும்போது கட்சியும்,ஆட்சியும் சிறப்பு செய்யும் பெருமையை கலைஞர் மட்டுமே பெற்று இருக்கிறார். பல்வேறு தலைவர்களின் வரலாற்றை படித்துள்ளேன் பன்முகத்தன்மை கொண்ட கலைஞரைப் போல் உலகில் வேறு எந்த தலைவரையும் பார்த்ததில்லை. பேரறிஞர் அண்ணாவால் கூட அகில இந்திய அரசியலில் கால் பதிக்க முடியவில்லை. முந்தைய காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தி.மு.கவை புழுவைப் போல் பார்க்கும் எண்ணம் கொண்டிருந்தனர்.

**திராவிடம் என்றால் இந்திக்காரர்களுக்கு பிடிக்காது!**

வங்கிகளை தேசிய மயமாக்கியது, இலவச மின்சாரம் வழங்கியது, பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்தது உள்ளிட்ட பல்வேறு பெருமைகளுக்கு சொந்தக்காரர் கலைஞர் மட்டும்தான்.ஆட்சிப்பணி, களப்பணி, கருத்துப் பணி,கழக பணி இலக்கிய பணி போன்ற ஒரு தனித்துவம் பெற்ற தலைவர் கலைஞர் ஒருவர் தான். ஏற்ற,தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்று கொள்கை பிடிப்போடு இருந்தவர் பெரியார். கலைஞர் அண்ணா காலத்தில் இருந்து இன்று வரை திராவிடம் என்றால் ஹிந்திக்காரரர்க்கு பிடிக்காது. அவர்களிடத்தில் கொள்கை இல்லை. மதத்தை வைத்து அரசியல் செய்கிறார்கள்.கொள்கை சித்தாந்தம் உள்ளிட்டவைகள் கொண்ட ஒரே இயக்கம் தி.மு.க என்பதால் பா.ஜ.க வினர் நம்மை கண்டு பயப்படுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களை உயர் நீதிமன்ற நீதிபதி ஆக்கிய பெருமை கலைஞர்க்கு தான் உண்டு.

**கலைஞரின் பேனா!**

மெரினாவில் கலைஞருக்கு பேனா சின்னம்



வைக்க வேண்டிய வழக்கில் உச்சநீதி மன்றத்தில் கூட நாங்கள் ஜெயித்து விட்டோம்.ஒரு சிலர் பேனா வைக்க கூடாது என்று கூறிவருகின்றனர். பேனா வைக்க வேண்டாம் என எடப்பாடி பழனிச்சாமி சொல்கிறார்.

எடப்பாடி 500 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார். அவரது விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்கியது அந்த பேனா.

கலைஞரின் திட்டத்தில் பயன்பெறாமல் தமிழகத்தில் யாரும் வாழ்ந்து விட்டால் நான் தூக்கு போட்டுக் கொள்கிறேன். கலைஞரின் திட்டமில்லாமல் யாரும் தமிழகத்தில் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை.கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது பிற்படுத்தப்பட்ட பட்டியலில் கொங்கு வேளாளர் சமுதாயத்தைச் சேர்க்கவில்லை என்றால் அண்ணாமலை ஆடு மேய்த்து இருப்பார் எடப்பாடி பழனிச்சாமி வெல்லமண்டி வைத்திருப்பார்,வானதி சீனிவாசன் கூடை மேய்ந்திருப்பார். கை ரிக்சாவை ஒழித்து சைக்கிள் ரிக்சாவை கொண்டு வந்து மாற்றியது அந்த கலைஞரின் பேனா.

அண்ணல் அம்பேத்காரால் கூட பெண்களுக்கு சம உரிமை கொடுக்கும் சட்டத்தை கொண்டுவர முடியவில்லை. கலைஞரின் அந்த சட்டத்தை 1989 ல் இந்தியாவிற்கே வழி காட்டும் விதமாக தமிழகத்தில் கொண்டு வந்தார் உலகத் தமிழர்களின் யாரும் பெற்றிடாத இடத்தை கலைஞர் பெற்றுள்ளார்.

அண்ணா, எம்ஜிஆர் ஆகியோருக்கு இல்லாத அடையாளம் கலைஞருக்கு கிடைத்துள்ளது.லட்சியத்துக்கு வாரிசாக இருப்பவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எவ்வளவு நெருக்கடிகளுடன் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்.பிரதமர் மோடியை ஆட்சியை விட்டு அகற்றியே தீருவேன் என சொல்லிக் கொண்டிருக்கும் நாட்டின் ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மட்டும் தான்,அவருக்கு மட்டுமே அந்த ஆற்றல் உண்டு.

**அதானி குறித்து பேசாத பிரதமர்!**

உலகிலேயே மிகப்பெரிய ஊழலை 18 லட்சம் கோடிக்கு அதானி செய்துள்ளார். அதனை ஹிண்டன் பார்க் அறிக்கை சொல்கிறது.அந்த அறிக்கையை யாராலும் மறுக்கக் கூட முடியவில்லை. தேசத்தின் சொத்தை அதானி அபகரித்துள்ளார்.பேசாமல் இருக்கும் ஒரே தலைவர் பிரதமர் மோடி. இதுவரை அவரை போன்ற ஒரு அரசியல் தலைவரை கண்டதில்லை அரசு விமானத்தில் அதானியை அழைத்து சென்று வெளிநாடுகளில் ஒப்பந்தத்தை வாங்கி கொடுத்த பிரதமர் மோடி, ஏமாற்றுப் பேர்வழியாக அதானி திகழ்கிறார். தொடர்ந்து இந்த விவகாரத்தில் பிரதமர் அமைதி காத்து வந்தால் அவரும் ஏமாற்று பேர்வழி தான். நான் சொல்வது தவறு இருந்தால் என் மீது வழக்கு தொடரட்டும். மோடிக்கு தைரியமும், துணிச்சலும்,மனவலிமை இருந்தால் அதானி விவகாரம் தொடர்பாக வாய் திறந்து பேசட்டும். எதையும் பற்றி பேசுவதில்லை பயமா? பலவீனமா! பேசாத மனிதனை மக்கள் கண்டதில்லை.

**முன்னாள் ஆளுநரின் குற்றச்சாட்டு!**

இந்திய படை வீரர்கள் 40 பேர் காஷ்மீரில் வெடி குண்டு வெடித்து உயிரிழந்த விவகாரத்தின் போது மோடிக்கு தேச பக்தி வந்து விட்டது. எப்போதெல்லாம் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வருகிறதோ அப்போதெல்லாம் ராணுவ வீரர்களை கொன்று விடுகிறார்கள். உலகத்தின் தலைவர் விஸ்வகுரு என சொல்லப்படும் மோடி மீது கவர்னராக இருந்த சத்திய பால் மாலிக் புல்வாமா தாக்குதல் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்திருக்கிறார். உயர் அதிகாரிகள் அனைவரும் எனது வாயை அடைத்துவிட்டீர்கள் என அவர் தெரிவித்தார். தேர்தலுக்காக ராணுவ வீரர்களை கொன்றுவிட்டு 2019 ஆட்சிக்கு பா.ஜ.க வந்தது. பா.ஜ.க ஊழல் மட்டுமல்ல மத வாதத்தையும் செய்கிறது.சுதந்திரப் போராட்டத் திற்காக போராடிய இஸ்லாமியர்கள் பெயர்களை ஒன்றிய பா.ஜ.க அரசு மறைக்கிறது.

இவ்வாறு கழக துணை பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி பேசினார்.

நிகழ்வில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம்,மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,கழக மூத்த முன்னோடிகள் அரசு கோதண்டராமன், குமார சுப்பிரமணியன், சாகுல் ஹமீது, சுடலையாண்டி,கரீம்,ஐஸ் மூக்கன், கண்ணய்யா,கிட்டா பாண்டியன், காட்டு பாவா,சர்புதீன், கழக நிர்வாகிகள் அப்துல்கையூம், பாலமுருகன் என்ற பிரபு தச்சை சுப்பிர மணியன், கருப்பசாமி கோட்டையப்பன்,ஒன்றிய செயலாளர் அருள்மணி, பொன்னையாபாண்டியன், முகமது மீரான் மைதீன்,ஆ.கா.மணி,

தலைமைக் கழக பேச்சாளர்கள் நெல்லை ரவி, நெல்லை முத்தையா, திராவிட மணி, கவிஞர் மூர்த்தி உள்பட மாவட்ட, மாநகர, பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள், முன்னாள் மாவட்டக் கழக நிர்வாகிகள் மாவட்ட அனைத்து அணி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட கழக செயலாளர்கள்,கழக உடன்பிறப்புகள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை வட்ட கழக செயலாளர் கதிரேசன் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் செய்திருந்தார்.

## ரபேல் ஊழல் விவகாரம்:

# பிரான்ஸ் நாட்டின் ஊடகங்களில் மீண்டும் விவாதப் பொருளானது!

## பிரதமர் மோடி பயணத்தின் எதிரொலி!

பாரீஸ், ஜுலை 15 -

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 2 நாள் அரசு முறைப் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ள நிலையில், ரபேல் ஊழல் விவகாரம் அந்நாட்டு ஊடகங்களில் மீண்டும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. பிரதமரின் தற்போதைய பயணத்தில், இந்தியா - பிரான்ஸ் இடையே சுமார் 90 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாகவும், இதில், பிரான்ஸ் நாட்டிடமிருந்து புதிதாக 26 ரபேல் விமானங்களை வாங்கும் ஒப்பந்தமும் அடங்கும் என்று கூறப்படுகிறது.

இந்திய கடற்படைக்காக 22 ஒற்றை இருக்கை கொண்ட ரபேல் கடற்படை விமானம், 4 பயிற்சி விமானம் மற்றும் 3 ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல் களைக் கொள்முதல் செய்யும் ஒப்பந்தம் குறித்து பிரதமர் மோடியின் பிரான்ஸ் பயணத்தின் போது அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது

**பிரான்ஸ் நீதிபதி கடிதம்!**

இந்நிலையில்தான், 2015 இல் மேற்கொள்ளப்பட்ட ரபேல் ஒப்பந்த ஊழல் விவகாரங்கள் மீண்டும் விவாதமாகியுள்ளன. பிரதமர் மோடி பிரான்சில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நேரத்தில், கடந்த 2015-16 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரபேல் ஒப்பந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு பிரான்ஸ் நீதிபதி, இந்திய அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

**அனில் அம்பானிக்கு வரிக்குறைப்பு!**

அதுமட்டுமல்லாமல், கடந்த 2015 ஆம் ஆண்டு ரபேல் ஒப்பந்தம் கையெழுத்தான போது, பிரான்ஸ் அரசால் அனில் அம்பானிக்கு வரி குறைப்பு தரப்பட்டுள்ள புதிய தகவலையும் மீடியாபார்ட் வெளிக்கொண்டு வந்துள்ளது. வரிக்குறைப்பிற்காக, அன்றைய பிரான்ஸ் பொருளாதார அமைச்சர் (இப்போது அவர்தான் ஜனாதிபதியாக இருக்கிறார்) இம்மானுவேல் மக்ரோன் மற்றும் நிதி அமைச்சர் மைக்கேல் சபின் ஆகியோருக்கு அனில் அம்பானி கடிதம் எழுதியதாகவும் மீடியா பார்ட் கூறியுள்ளது. அனில் அம்பானியின் கோரிக்கையை ஏற்று, 151 மில்லியன் யூரோ என்ற வரிக் கட்டணம், இறுதியில் 6.6 மில்லியன் யூரோவாக குறைக்கப்பட்டது என்பதையும் அம்பலப்படுத்தியுள்ளது.

முன்பு, ரபேல் போர் விமானக் கொள்முதலில் நடந்த ஊழல் முறை கேடுகள் தொடர்பாக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ‘மீடியா பார்ட்’ என்ற செய்தி இணையதளம்தான் பல்வேறு புலனாய்வு தகவல்களை வெளிக் கொண்டு வந்தது. அதே ‘மீடியா பார்ட்’ நிறுவனம்தான் இந்த தகவலையும் வெளியிட்டுள்ளது.

**புதிய ஒப்பந்தத்தில் பா.ஜ.க. அரசு ஆர்வம்**

ஆனால், எதுவுமே நடக்காதது போல இருக்கும் பிரதமர் மோடி, பிரான்சின் பாஸ்டில் தினக் கொண்டாட்டத் தில் கௌரவ விருந்தினராகப் பங்கேற்கவும், பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், மேலும் 26 ரபேல் போர் விமானங்கள் மற்றும் 3 நீர்மூழ்கி கொள் முதல் ஒப்பந்தங்களை ஏற்படுத்தவும் தயாராகி விட்டார் என்று மீடியாபார்ட் குறிப்பிட்டுள்ளது. தற்போதைய இந்த புதிய ஒப்பந்தம் எத்தனை ஆயிரம் கோடி மதிப்பி லானது, ஒரு விமானத்தின் கொள் முதல் விலை எவ்வளவு என்பது இன் னும் வெளியாகவில்லை.

**நீதிபதி கடிதம் எழுதியதன் பின்னணி**

ரபேல் போர்விமான ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, இந்தியாவின் ‘டெப்ஸிஸ் சொல்யூஷன்ஸ்’ என்ற நிறுவனத்திற்கு, பிரான்ஸ் நாட்டின் டஸ்ஸால்ட் நிறுவனம் 1 மில்லியன் யூரோக்களை (ரூ. 8 கோடியே 62 லட்சம்) ‘பரிசாக’ வழங்கியதை, அந்நாட் டின் ஊழல் தடுப்புப் பிரிவான ‘ஏஜென்ஸ் பிராங்கா யிஸ் ஆன்டிகரப்ஷன் (AFA) கண்டுபிடித்தது. இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கை அலுவலகத்திற்கு (CAG) இணையான இந்த பிரான்ஸ்நாட்டு நிறுவனம், 2017ஆம் ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்களின் ஊழல் முறைகேடுகளை கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்டு, அதன் பணிகளை மேற்கொண்ட போதுதான், ‘வாடிக்கையாளர்களுக்கு பரிசு’ என்ற தலைப்பில் 5 லட்சத்து 8 ஆயிரத்து 925 யூரோக்கள் மதிப்பிலான லஞ்சத்தைக் கண்டு பிடித்தது.

இந்தியாவிற்கு ரபேல் விமானங்களைத் தயாரித்து வழங்கிய ‘டஸ்ஸால்ட்’ நிறுவனமும், லஞ்சம் கொடுத்ததை ஒப்புக்கொண்டதாக கூறப் பட்டது. ஆதாரப்பூர்வமாகவே, ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம் வாங்கிய ‘டெப்ஸிஸ் சொல்யூஷன்ஸ்’ நிறுவனம், இந்திய அரசுக்கு, 36 ரபேல் போர் விமானங்களை தயாரித்துக் கொடுப்பதற்கான டஸ்ஸால்டின் துணை ஒப்பந்தக்காரர்களில் ஒன்று என்பது முக்கிய மானது. அதுமட்டுமல்ல, ‘டெப்ஸிஸ் சொல்யூஷன்ஸ்’ நிறுவனம் மூன்று தலைமுறைகளாக விமானம் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில்களில் இடைத்தரகர்களாக விளங்கும் குப்தா குடும்பத்தினருக்குச் சொந்தமானது என்பதும் குறிப்பிடத் தக்கது.

**ஆவணங்களைத் திருடித் தந்த சுஷென் குப்தா**

இவற்றையெல்லாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்த பிரான்ஸ் நாட்டின் ‘மீடியாபார்ட்’ செய்தி நிறுவனம், “ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம் வாங்கிய அந்த நபர், பாதுகாப்புத் துறை சம்பந்தமான மற்றொரு ஒப்பந்த விவகாரத்தில் அண்மையில் இந்திய அமலாக்கத்துறையால் கைது செய்யப் பட்டார்” என்று ‘ஏஜென்ஸ் பிராங்காயிஸ் ஆன்டிகரப்ஷன் (AFA) சரியாக கண்டுபிடித்தது;

அதாவது, அகஸ்டா வெஸ்ட்லேண்ட் வி.வி.ஐ.பி. இடைநிலை ஒப்பந்தத்தில் கைது செய்யப்பட்ட சுஷேன் மோகன் குப்தாவையே மறைமுகமாக ஏ.எப்.ஏ. அமைப்பு குறிப்பிட்டது. குப்தா, இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து ரகசிய ஆவணங்களைப் பெற்று, டஸ்ஸால்ட் நிறுவனத்திற்கு வழங்கியதற்காகவே அவருக்கு ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம் வழங்கப்பட்டது என்று தெரிவித்தது.

மீடியாபார்ட் இதழில் வெளியான செய்திகள் மற்றும் பிரான்சைச் சேர்ந்த பொருளாதார குற்றங்களை விசாரித்து வரும் ஷெர்பா என்ற தொண்டு நிறுவனம் அளித்த புகார் ஆகியவற்றின் அடிப்படையில் ரபேல் ஊழல் விவகாரத்தில் விசாரணை நடத்த, ஜீன் பிரான்கோயிஸ் போநெர்ட் என்ற நீதிபதியை பிரான்ஸ் அரசு நியமித்தது. இதில், பிரான்ஸ் நீதிமன்றத்தில் தற்போதும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில்தான், இந்தியப் பிரதமர் மோடி பிரான்ஸ் வந்துள்ள நிலையில், ரபேல் ஊழல் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இந்திய அரசுக்கு, இவ்வழக்கை விசாரித்து வரும் பிரான்ஸ் நீதிபதி கடிதம் எழுதியுள்ளதாக மீடியா பார்ட் நிறுவனம் புதிய செய்தியை வெளியிட்டுள்ளது.

5 ஆண்டுகளாக விசாரணை இல்லை ‘அகஸ்டா வெஸ்ட்லேண்ட்’ முறைகேடு தொடர்பான விசாரணையின் போதே, இந்திய புலனாய்வு அமைப்பின் கோரிக்கை பேரில், சுஷென் மோகன் குப்தா தொடர்பான ஆவணங்களை மொரீஷியஸ் தலைமை வழக்கறிஞர் அலுவலகம் அளித்திருந்தது.

அதில், டஸ்ஸால்ட் நிறுவனம், 2007 முதல் 2012 வரையிலான காலகட்டத்தில் சுஷென் குப்தாவுக்கு 7.5 மில்லியன் யூரோ (இந்திய மதிப்பில் 64.26 கோடி ரூபாய்) அளவிற்கான தொகையை போலி ரசீதுகள் (False Invoices) மூலம் வழங்கியதாக தெரிவித்திருந்தது. பா.ஜ.க. ஆட்சியில் 2015ஆம் ஆண்டு டஸ்ஸால்ட் நிறுவனம் உடனான ரபேல் போர் விமான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட போது, இதிலும் சுஷென் குப்தாவுக்கு (ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம்) பங்கு உள்ளதாக 2018 இல் சந்தேகம் எழுப்பப்பட்டு இருந்தது.

ஊழல் தொடர்பான இந்த ஆவணங்கள் 2018 அக்டோபர் 11 அன்றே கிடைத்தும், இந்திய புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. விசாரணை நடத்தவில்லை” என்பதுதான் குற்றச்சாட்டாகும்.



தேனி வடக்கு மாவட்ட கட்சி அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பதற்கு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் 15 ஆம் தேதி அன்று மதுரைக்கு திறப்பு விழாவிற்கு வருகை தருவதற்கு தேனி வடக்கு மாவட்டம் சார்பாக 100 வாகனங்களில் சென்று வரவேற்பு கொடுப்பது குறித்து ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கத்தமிழ் செல்வன் தலைமையில் ஆலோசனைகூட்டம் நடைபெற்றது. உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் செல்லப் பாண்டி, மாவட்ட பொருளாளர் சுரேஷ், நகர செயலாளர்கள் நாராயண பாண்டியன், புருஷோத்தமன், முகமது இலியாஸ், ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன், ரத்தின சபாபதி, சக்கரவர்த்தி, கண்ணியம்பட்டி முருகேசன், ஐயப்பன் பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 9**

ம.அ.9.ந.க.எண்.இ1 / 595 / 2023

**மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**
**நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்**

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை, |
|---|---|---|---|---|
| 1 | மண்டலம்-9, பகுதி-26, வார்டு எண்.112ல் உள்ள வெள்ளாளர் சாலையில் புதிய சமூக நலக்கூடம் (தரை தளம் மற்றும் முதல் தளம்) கட்டும் பணி | 189.08 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 03.08.2023 மாலை. 03.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 04.08.2023 மாலை. 03.30 மணி

செ.ம.தொ.இ / 3656 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மா.வ.அ / மண்டல அலுவலர்
மண்டலம்-9

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**GREATER CHENNAI CORPORATION**
**SPECIAL PROJECTS DEPARTMENT**

S.P.D.C.No B1/0577/2022

**e -TENDER NOTICE**

*e - Tender is invited for the following work in Two Cover System as per details furnished below.*

**S.P.D.C.No.B1/0577/2022:-** Establishment of additional Pond at Villivakkam Tank in Dn.94, Zone - VIII under Smart City Fund - Approximate value of work - Rs.7.50 Cr. (Inclusive of GST) - Submission of E.M.D. **Rs.7,50,000/-**

| | | |
|---|---|---|
| Tender document will be available in website | : | https://tntenders.gov.in |
| Pre-bid meeting date and time | : | 24.07.2023 at 3.00 p.m |
| Tender last date and time of submission | : | 16.08.2023 upto 3.00 p.m. |
| Tender opening date and time | : | 17.08.2023 at 3.00 p.m |

DIPR / 3653 / Tender / 2023

**Superintending Engineer / Spl. Projects.**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்